# உணவகங்களில் மது அருந்த எப்.எல்.3பி உரிமம் வழங்குதல்
# (Grant of F.L. 3B Licence for Resto Bars)

- தற்சமயம், தமிழகத்தில் மணமகிழ் மன்றங்கள் (ம) நட்சத்திர விடுதிகளில் மட்டும் மதுபானம் வைத்திருக்கவும், மது அருந்தவும் **எப்.எல்.2 (ம) எப்.எல்.3** உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

- நமது அண்டை மாநிலங்களில் உள்ள உணவகங்களில் மது அருந்த உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- இந்நிலையில், குளிரூட்டப்பட்ட உணவகங்களில் மது அருந்துவதற்கு உரிமம் வழங்க ஏதுவாக 1981 – ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி கோரப்படுகிறது.

# எப்.எல்.3பி உரிமம்

- தமிழகத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அமையப் பெற்ற குளிரூட்டப்பட்ட உணவகங்களில் மதுபானம் வைத்திருக்கவும், உணவருந்த வரும் நபர்களுக்கு வழங்கவும், உரிமம் பெற்ற அறையில் மது அருந்தவும் **எப்.எல்.3பி** உரிமம் வழங்கலாம்.

# எப்.எல்.3 பி உரிமம் வழங்குவதற்கான தகுதிகள்

- உரிமம் வழங்கப்படும் உணவகத்தின் குறைந்தபட்ச பரப்பளவு (minimum carpet area) **1500** சதுர அடியாக இருக்க வேண்டும்.

- உணவகத்தில் உள்ள உணவு உட்கொள்ளும் அறைக்கும் (Dining room) மதுக்கூட அறைக்கும் (Bar room) தனித்தனியே நுழைவு (ம) வெளியேறும் வழிகள் அமையப் பெற்றிருக்க வேண்டும்.

- உணவகத்தில் உள்ள மதுக்கூட அறையின் குறைந்தபட்ச பரப்பளவு **250** சதுர அடியாக இருக்க வேண்டும்.

- உரிமம் வழங்கப்படும் உணவகமானது வணிக வரித் துறையால் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து ஓராண்டு அதே இடத்தில் செயல்பட்டிருக்க வேண்டும்.

# எப்.எல்.3 பி உரிமம் வழங்குவதற்கான தகுதிகள்

- உணவகமானது உள்ளாட்சி அமைப்பிடமிருந்து வழங்கப்படும் உணவக உரிமம் / வர்த்தக உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
- உரிமம் வழங்கப்படவுள்ள உணவகமானது வழிபாட்டுத் தலங்கள் (ம) கல்வி நிறுவனங்களில் இருந்து குறைந்த பட்சம் **50** மீட்டர் தொலைவில் அமையப் பெற்றிருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்பில் எவ்வளவு உரிமங்களை வழங்கலாம் என்பதைத் தீர்மானிக்க அரசிற்கு அதிகாரம் உள்ளது.

# புதிய எப்.எல். 3பி உரிமம் பெறுவதற்கான கட்டண விபரங்கள் மற்றும் ஆண்டுதோறும் புதுப்பிப்பதற்கான கட்டண விபரங்க்ள்

| வ. எண். | உரிமம் அமைந்துள்ள பகுதி | விண்ணப்ப கட்டணம் (ரூ) | உரிமக் கட்டணம் (ரூ) | சிறப்புரிமக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை மாநகராட்சி | 7,500/- | 25,000/- | 10,00,000/- |
| 2 | பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகள் | 7,500/- | 25,000/- | 8,00,000/- |